செ.வெ.எண்-07 நாள்-04.07.2019

# பத்திரிக்கைச் செய்தி.

பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டத்தின்கீழ் 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 6 ஆயிரம் நிதி உதவி வழங்கும் திட்டம் கடந்த பிப்ரவரி 24-ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்த திட்டத்தில் தற்போது 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகளுக்கும் நிதி உதவி வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே மாவட்டத்தில் உயர் வருவாய் பிரிவினர் மற்றும் நிறுவனத்தின் பெயரில் நிலம் உள்ளவர்களைத் தவிர பிற விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்வதற்கு உடனடியாக கிராம நிர்வாக அலுவலரிடம் விண்ணப்பம் அளித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதன் தொடர்ச்சியாக வருவாய் துறை, வேளாண்மை துறை மற்றும் தோட்டக்கலை துறை அலுவலர்கள் மூலம் கணக்கெடுக்கும் பணி கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வருகிறது.

மேலும், வாரிசு அடிப்படையில் பட்டா மாறுதல் செய்து கொள்ளும் வாரிசுகளுக்கும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே இதுவரையில் தங்களது தாய் மற்றும் தந்தை பெயரில் நிலங்கள் இருக்கும் விவசாயிகள் அதற்குரிய வாரிசுதாரர் சம்பந்தப்பட்ட பகுதியின் தாசில்தாரை அணுகி உரிய முறையில் விண்ணப்பம் அளித்து வரும் **09.07.2019**-ஆம் தேதிக்குள் பட்டா மாறுதல் செய்து இத்திட்டத்தில் பயன் பெறலாம்.

மேலும் மாவட்டத்தில் இதற்கென சிறப்பு முகாம் **09.07.2019 செவ்வாய்க்கிழமை** அன்று மாவட்ட ஆட்சியர் அலுவகம், அரியலூர் மற்றும் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், அனைத்து வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள், அனைத்து கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களில! காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறுகிறது. மேற்கண்ட நிதி உதவியினை பெற விண்ணப்பிக்கும் விவசாயிகள் தங்களது ஆதார் எண், வங்கி கணக்கு பாஸ் புத்தகம், பட்டா சிட்டா நகல், ரேசன் கார்டு நகல், மொபைல் எண் ஆகியவற்றை உரிய விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து விண்ணப்பத்துடன் இணைத்து ஒப்படைக்க வேண்டும். எனவே, மேற்கண்ட திட்டத்தில் நிதி உதவி பெற விவசாயிகள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**